ஜனவரி வரை என்று கல்வி ஆண்டுகள் உள்ளன. அதை மாற்றி ஜூன் முதல் ஜூலை வரை என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதா ? அப்படி இருந்தால் எப்போது முதல் அமலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மாணவர்கள் ஒரு ஆண்டுக்குத் தேவையான படிப்பு நாட்களில் இடைக்காலத்தில் லீவு எடுக்காமல், ஒழுங்காக 220 நாட்களும் ஆஜராகி விடுவதால் லீவுகள் அதிகமாகி வருகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் நடுநிலைப் பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு முடிந்தபிறகும், கிறிஸ்து பிறப்புக்கும் புதுவருட லீவும் சேர்த்து 10 நாட்களுக்குத்தான் லீவு விடுகிறார்கள். அதைக் கூட்டி 20 நாட்களுக்கு லீவு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த உரிமையை நாம் பள்ளிகளுக்குத் தந்திருப்பதன் மூலமாக அங்கேயே அவர்கள் நிறைவு செய்து கொள்ளலாம். 220 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இட ஒதுக்கீடு.

*513 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கு பி. டி. பயிற்சியில் இடஒதுக்கீட்டின் சதவீதத்தினை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

*514 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கென குறுகியகால B.T., பயிற்சி அளிக்கும் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.